(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். குழுவின் உறுப்பினர் திரு. இராஜமன்னார்.

திரு சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் பத்தாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கின்றேன்.

6. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் '' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : லாபியில் இருக்கிற உறுப்பினர்கள் அங்கே சத்தம் போட்டுக்கொண்டோ சண்டைபோட்டுக் கொண்டோ இருக்கக்கூடாது. அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ ஆம் ’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘ இல்லை ’ என்க (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) வேளாண் விளைபொருள் வாணிப(முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு. இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

‘1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்யஅனுமதி அளிக்க வேண்டும்’ எனக் கோருகிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் :மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் “ ஆம் ” என்க. (ஆம்)

மறுப்போர் “இல்லை” என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.